**செய்தி வெளியீடு எண்: 964** **நாள்:16.12.2020**

**<u>இன்று (16.12.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் சேலம் மாநகரில், டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனையின் புதிய கிளையை திறந்து வைத்து ஆற்றிய உரை:</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன். இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே என்னைக் கலந்துகொள்ளச் செய்து இந்த அற்புதமான மருத்துவமனையை சேலம் மாவட்ட மக்களுக்கு அளித்த

மரியாதைக்குரிய டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனைகள் தலைவர்
பேராசிரியர் அமர் அகர்வால் அவர்களே!

டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனைகள் தலைமை நிர்வாக அதிகாரி

மரியாதைக்குரிய டாக்டர் அதில் அகர்வால் அவர்களே!

டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனைகளின்

இந்திய மற்றும் ஆப்பிரிக்க செயலாக்க மண்டல தலைவர்

மரியாதைக்குரிய டாக்டர் கலாதேவி அவர்களே!

சேலம், டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையின்
தலைமை மருத்துவர் மரியாதைக்குரிய டாக்டர் கற்பகவள்ளி அவர்களே!

மற்றும்

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கிற மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே!

மரியாதைக்குரிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே!

மருத்துவர்களே, செவிலியர்களே மற்றும் பணியாளர்களே!

வருகை தந்திருக்கிற பத்திரிகையாளர்களே, ஊடக நண்பர்களே!

அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கம்.

உடல் உறுப்புகளில் அறிவின் திறவுகோலாக இருப்பது கண்கள். குறிப்பு அறிவதிலும், குறிப்பு அறிவுறுத்துவதிலும் கண் பெரும் பங்கு வகிக்கிறது. அதனால் தான்,

“எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு”

அதாவது எண்ணும் எழுத்தும் மக்களுக்கு கண் ஆகும் என்றார் தெய்வப் புலவர்.

சிற்பக்கலையில், சிலை வடிக்கும்போது, அனைத்துவித வேலைப்பாடுகளும் முடிந்தபின், இறுதியாக நடக்கும் கண்திறக்கும் நிகழ்வு முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஏன் ? சிலையின் உயிரோட்டத்திற்கு கண் தான் ஆதாரம்.

இத்தகைய சிறப்புமிக்க உறுப்பாகிய கண்ணைப் பாதுகாக்கின்ற பணியை, அகர்வால் மருத்துவமனை, 60 ஆண்டுகளுக்கும் மேலாக நல்லமுறையில் நாட்டு மக்களுக்கு அர்ப்பணிப்பு உணர்வோடு மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியது.

கண்ணுக்கு ஏற்படும் பல்வேறு நோய்களைக் கண்டறிந்து, அதற்குத் தீர்வு காண, பல்வேறு நவீன யுக்திகளைக் கையாண்டு, எளிமையான முறையில், குறைவான நேரத்தில் தரமான சிகிச்சை அளிக்கும் பொருட்டு, 95–க்கும் மேற்பட்ட மருத்துவமனைகளை 13 நாடுகளில் நிறுவி, லட்சக்கணக்கான நோயாளிகளை குணப்படுத்தி வருகின்ற அகர்வால் மருத்துவமனை, தங்கள் மருத்துவமனை என்று அறிவதில் நான் பெருமை கொள்கிறேன்.

சமூக பொறுப்புணர்வுடன் இலவச கண்சிகிச்சை முகாம்களை நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தி, குறிப்பாக கிராமப்புறப் பகுதிகளிலும் நடத்தி, ஏழை, எளிய மக்களுக்கு உயரிய சிசிச்சையளிக்கும் உங்கள் நிறுவனத்தின் சமுதாயப் பணியை பாராட்டுகிறேன்.

இறைவன் எப்படி தன்னை நாடி வரும் மக்களிடம், எந்தவிதமான வித்தியாசமும் காட்டாமல் அவர்களின் குறையைத் தீர்க்கின்றானோ, அதுபோல் மருத்துவமனைகளும், தம்மை நாடி வரும் நோயாளிகளிடம் எந்தவிதமான வித்தியாசமும் பாராமல் அவர்களுக்குத் தரமான மருத்துவ சேவையை வழங்க வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு, சேலம் மாவட்ட மக்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய அகர்வால் கண் மருத்துவமனையை இந்த நிறுவனம் அளித்திருக்கிறது. அதற்கு மாவட்ட மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்து, இந்த இனிய நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்வதற்கு நல்ல வாய்ப்பினை நல்கிய இந்நிறுவனத்திற்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

*****